இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 236 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 24 – செவ்வாய்க்கிழமை 07 ஏப்ரல் 2026 – திருச்சி ★ ★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 236 : Thiruvalluvar Year - 2057 - Panguni 24 - Tuesday 07 April 2026 - Trichy ★★ 16 Pages ₹ 5.00




## வதந்திகளை நம்பி வாந்தி எடுக்கும் 10 தோல்வி பழனிசாமிக்கு 11–வது தோல்வியையும் பரிசாகத் தருவீர்!

# தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் பா.ஜ.க. - அ.தி.மு.க. சதிக் கூட்டணி !

## வேகாத வெயிலிலும் வியக்கத்தக்க வகையில் கூடிய விருதுநகர் பிரச்சாரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்க உரை!

**விருதுநகர், ஏப்.7-**

**விருதுநகரில் வேகாத வெயிலிலும் வியக்கத்தக்க வகையில் கூடிய மக்கள் திரளிடையே நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது “வதந்திகளை நம்பி வாந்தி எடுக்கும் 10 தோல்வி பழனிசாமிக்கு 11-வது தோல்வியையும் பரிசாகத் தாரீர்” என்றும் “தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கிறது தமிழின விரோத பா.ஜ.க. - அ.தி.மு.க. சதிக் கூட்டணி” என்றும் கூறினார்.**

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (05.04.2026) காலை, விருதுநகரில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-

சிவகாசி பட்டாசு என்றாலும் விருதுநகர்தான்! சாத்தூர் பலகாரம் என்றாலும் விருதுநகர்தான்! திருவில்லிப்புத்தூர் பால்கோவா என்றாலும் விருதுநகர்தான்! பரோட்டா என்றாலும் விருதுநகர்தான்! தீப்பெட்டி என்றாலும் விருதுநகர்தான்! காலண்டர் என்றாலும் விருதுநகர்தான்!

உங்களை குட்டி ஜப்பான் என்று சும்மாவா சொன்னார்கள்! மொத்தத்தில் சுறுசுறுப்புக்குப் பெயர் பெற்ற மக்கள் வாழும் மாவட்டமான விருதுநகருக்கு உங்களை நாடி வந்திருக்கிறேன்! இப்படி, ஓயாமல் உழைக்கும் உங்களைப் பார்த்து நானும் கொஞ்சம் எனர்ஜி பூஸ்ட் ஏற்றிக் கொள்ளலாம் என்று விருதுநகருக்கு வந்திருக்கிறேன்.

விருதுநகர் என்று சொன்னாலே வீரத் தியாகி சங்கரலிங்கனாரை மறக்க முடியுமா? நமது தாய்நிலத்தை ‘தமிழ்நாடு’ என்று வாய் நிறைய - நெஞ்சம் நிறைய - பெருமை பொங்க அழைக்க வேண்டும் என்று போராடி, அதற்காக உயிரைத் தந்தவர் சங்கரலிங்கனார் அவர்கள்!

### கல்விக் கண் திறந்த பச்சைத் தமிழர்!

அவர் மட்டுமா, ஈரோடு என்றால் தந்தை பெரியார்; காஞ்சி என்றால் பேரறிஞர் அண்ணா; திருவாரூர் என்றால் தலைவர் கலைஞர் என்பதைப் போன்று, விருதுநகர் என்றால் பெருந்தலைவர் காமராசர்! அவரின் மண் இது! அரசியல் கடந்து தனிப்பட்ட முறையிலும் எனக்கு அவர் மேல் மிகுந்த மரியாதை உண்டு. உடல்நலம் பாதிக்கப்பட்ட நிலையில் என்னுடைய திருமணத்திற்கு நேரில் வந்து வாழ்த்தியவர் ஐயா காமராசர் அவர்கள்! அதை என்னால் எப்போதும் மறக்க முடியாது! பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்தநாளான ஜூலை 15 கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்பட வேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டு, இப்போது வரை அது கடைப்பிடிக்கப்படுகிறது! அப்படி, தமிழ்நாட்டு மாணவர்களின் கல்விக்கண் திறந்த பச்சைத் தமிழர் காமராசர் அவர்களின் விருதுநகருக்கு நான் வந்திருக்கிறேன்.

தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கும்



பிரச்சாரத்திற்காக நான் சென்று வந்திருக்கிறேன். அவர்கள் எல்லாம் திராவிட மாடல் 2.0வுக்கு டபுள் ஓகே சொல்லிவிட்டார்கள். விருதுநகர் மக்கள் திராவிட மாடல் ஆட்சி உருவாக வேண்டும் என்று சொல்ல நீங்கள் தயார் ஆகிவிட்டீர்களா? தயார்.

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெற வைப்பீர்!

அதற்கு, இங்கு நிற்கும் நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை நீங்கள் வெற்றி பெற வைக்க வேண்டும்.

முதலில், அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்கள். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களால் அடையாளப்படுத்தப்பட்டவர். அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரை மக்கள் பணியாற்றுபவர்.

தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் ஏறக்குறைய 23 இலட்சம் பேருக்கு பட்டா வழங்கி சாதனை படைத்திருக்கிறோம் என்றால் அந்த சாதனைகளுக்கு பொறுப்பேற்று செயல்பட்டவர் இவர். அப்படிப்பட்ட நம்முடைய அண்ணாச்சி கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்களுக்கு நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் உங்கள் ஆதரவைத் தந்திட வேண்டும்.

அடுத்து, திருச்சுழி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் மாண்புமிகு அமைச்சர் என்னுடைய இனிய சகோதரர் தங்கம் தென்னரசு அவர்கள். தலைவர் கலைஞரின் அன்புத் தூண்; அதுமட்டுமல்ல, என்னுடைய வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட அண்ணன் தங்கப்பாண்டியனின் மகன். 5 முறை சட்டமன்ற உறுப்பினராக வென்ற தங்கம் தென்னரசு அவர்கள், தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் உயர்த்திய திராவிட மாடல் ஆட்சியின் நிதித்துறையை தலை நிமிர வைத்த பெருமைக்கு சொந்தக்காரர். இன்னும் சொல்ல வேண்டும் என்றால், இவரை எதிர்த்து நிற்கவே எதிர்க்கட்சி வேட்பாளராக அறிவிக்கப்பட்டவர் விரும்பவில்லை என்று செய்திகள் வருகிறது. அந்த அளவு வலிமையான வேட்பாளர்! அப்படிப்பட்ட தங்கம் தென்னரசு அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் எல்லாம் மீண்டும் ஆதரித்து வெற்றி பெற வைக்க வேண்டும்.

அடுத்து, சாத்தூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் கடற்கரை ராஜ் அவர்கள். இவர், மாவட்டச் சேர்மனாக இருந்து மக்கள்பணி ஆற்றியிருக்கிறார். சாத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளராக இருந்து தீவிரப்பணி செய்து கொண்டிருப்பவர். அப்படிப்பட்ட கடற்கரை ராஜ் அவர்களுக்கு, நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் சாத்தூர் மக்களான நீங்கள் உங்கள் பொன்னான வாக்குகளை வழங்கிட வேண்டும்.

அடுத்து, ராஜபாளையம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் தங்கபாண்டியன் அவர்கள். இரண்டு முறை ராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று உங்களுக்கு நன்றாக அறிமுகமானவர். தொகுதி மக்களுக்காக பல்வேறு சமூக சேவைப் பணிகளையும் ஆற்றி வருபவர். ராஜபாளையம் மக்கள் விரும்பும் தங்கபாண்டியனுக்கு நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும்.

அடுத்து, விருதுநகர் சட்டமன்றத் தொகுதி. நமது கூட்டணித் தோழமையான தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சேர்ந்த வேட்பாளர் என்னுடைய அன்புத் தம்பி விஜயபிரபாகரன் அவர்கள். எனது ஆருயிர் நண்பர் பெருமதிப்பிற்குரிய கேப்டன் விஜயகாந்த் மற்றும் அன்புச் சகோதரி பிரேமலதா அவர்களின் அன்பு மகன்தான் இங்கே வேட்பாளராக நிற்கிறார். தே.மு.தி.க.வின் இளைஞரணிச் செயலாளராக துடிப்புடன் செயல்பட்டு கொண்டிருப்பவர். அவருக்கு நீங்கள் எல்லாம் முரசு சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்